Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

Calendar .. .. }
Miscellaneous .. .. }
Preliminary Register .. .. } **S.C. 90/2020**
Sessions .. .. }
} Prosecution – **PW**3
Deposition of witness for } Defence –
} Court –

| | | |
|---|---|---|
| Name | : | உமா |
| Husband Name | : | கோவிந்தராஜ் |
| Village | : | இராமநாதபுரம் |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Caste | : | |
| Calling | : | வீட்டுக்குடித்தனம் |
| Religion | : | இந்து |
| Age | : | 43 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.04.2023

(எதிரி ஆஜர்.)

முதல் விசாரணை–

நான் தற்போது இராமநாதபுரம் தங்கப்பா நகரில் வசித்து வருகிறேன். அ.சா.1 மீனாட்சி எனது அம்மா ஆவார். இந்த வழக்கில் இறந்துபோன ராஜா எனது தம்பி ஆவார். ஆஜர் எதிரியை தெரியும். எனது தம்பி ராஜா இறப்பதற்கு முன்பு கொத்தனார் வேலை பார்த்து வந்தார். ஆஜர் எதிரி கொத்தனார் வேலை மற்றும் பெயிண்டிங் வேலை செய்து வருகிறார். எனது தம்பியை குத்துவதற்கு 3 மாதங்களுக்கு முன்பு எதிரி சரவணன், அவரது அண்ணன் குமார் மற்றும் எனது தம்பி ராஜாவுக்கும் வேலை பார்த்த இடத்தில் சம்பளம் பிரிப்பது சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. அதனால் அவர்களுக்குள் கேணிக்கரை பாலன் ஹோட்டல் அருகே ஒருவருக்கொருவர் வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பு ஆனது. அதனால் எனது தம்பி என் அம்மாவிடம்

சம்பள பிரச்சனையில் எதிரியும் நானும் சண்டைபோட்டுள்ளோம் என்று சொல்லவும் எனது அம்மா எனது தம்பியை பார்த்து நீ இங்கு இருக்க வேண்டாம். நீ வெளியூரில் தங்கி வேலை பார் என்று சொன்னார். அதனால் என் தம்பி வேலை பார்க்க திருப்பூருக்கு சென்றார். 19.08.2019 ம் தேதி அதிகாலை 05.30 மணியளவில் எனது தம்பி திருப்பூரிலிருந்து இராமநாதபுரத்திற்கு என் அம்மா வீட்டிற்கு வந்துவிட்டார். அப்போது எனது அம்மா எனது தம்பியை பார்த்து ஏன் இங்கு வந்த என்று கேட்டபோது எனது தம்பி அவரது குழந்தைகளையும் அவரது அம்மாவையும் பார்த்துவிட்டு நான் உடனே திருப்பூருக்கு கிளம்பிவிடுவேன் என்று சொல்லியுள்ளார். அன்று காலை 07.30 மணியளவில் என் தம்பி ராஜா வேலை எதுவும் இருக்கிறதா என்று பார்த்து வருவதாக சொல்லி சென்றார். அன்றைய தினம் காலை 10.30 மணியளவில் எனது தம்பியின் மகன் காளீஸ்வரன் என்பவருக்கு இரவிந்திரன் என்பவர் போன் மூலம் எனது தம்பியை ஜெகன் தியேட்டர் அருகே வைத்து எதிரி சரவணன் கத்தியால் குத்திவிட்டதாகவும் அதனால் என் தம்பியை இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்துள்ளோம் என்று எனது தம்பி மகன் எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார். நான், என் அம்மா, எனது தம்பி மகன் காளீஸ்வரன் ஆகியோர்கள் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். மருத்துவமனையில் எனது தம்பிக்கு இடதுபக்க முதுகு, வலதுபக்க உள்ளங்கையில் காயம் ஏற்பட்டு மயங்கிய நிலையில் இருந்தார். போலிசார் சம்பவம் குறித்து எனது அம்மாவிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார். அதில் எனது அம்மா கைரேகை வைத்தார். புகார் வாக்குமூலத்தின் இரவிந்திரன் அறிவேன் சாட்சியாக கையொப்பம் போட்டார். இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் என் தம்பியினுடைய காயம் தீவிரமாக இருந்தால் மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தோம். அங்கு கேணிக்கரை போலிசார் எங்களிடம் வந்து விசாரித்தார். அதன் பிறகு எனது தம்பி 23.08.2019 ம் தேதி மாலை 05.00 மணிக்கு இறந்துவிட்டார். சம்பவ தினத்தன்று என் தம்பி அணிந்திருந்த இரத்தக்கறை படிந்த ஊதாவெள்ளைக்கலர் கலந்த இரண்டு துண்டுகளாக உள்ள சட்டையை ஆய்வாளர் என்னிடம் அத்தாட்சி மூலம் கைப்பற்றினார். ஆய்வாளர் என்னிடமிருந்து கைப்பற்றிய என் தம்பியின் ஊதாவெள்ளைக்கலர் கலந்த இரண்டு துண்டுகளாக உள்ள சட்டை

**சா.பொ.4**. எதிரி மீது நடவடிக்கை எடுக்க என் அம்மா தான் கேணிக்கரை காவல் நிலைய போலிசாரிடம் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் வைத்து புகார் வாக்குமூலம் கொடுத்தார். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நேரமின்மை காரணமாக குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியின் கையொப்பம்

என்னால் தட்டெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டெழுத்து செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | } | |
| Miscellaneous | .. | .. | } | |
| Preliminary Register | .. | .. | } | **S.C. 90/2020** |
| Sessions | .. | .. | } | |
| | | | } | Prosecution – **PW**2 |
| Deposition of witness for | | | } | Defence – |
| | | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | மணிகண்டன் |
| Father/Husband Name | : | இராஜேந்திரன் |
| Village | : | இராமநாதபுரம் |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Caste | : | |
| Calling | : | ஆட்டோ டிரைவர் |
| Religion | : | இந்து |
| Age | : | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.04.2023

<u>(எதிரி ஆஜர்.)</u>

முதல் விசாரணை–

நான் தற்போது இராமநாதபுரம் வழிவிடுமுருகன் கோவில் தெருவில் வசித்து வருகிறேன். நான் ஆட்டோ டிரைவராக ஜெகன் தியேட்டர் அருகில் உள்ள ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோ வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 19.08.2019 ம் தேதி மதியம் சுமார் 02.00 மணியளவில் நானும், முருகேசன் என்பவரும் ஜெகன் தியேட்டர் அருகில் இருக்கும் போது கேணிக்கரை ஆய்வாளர் அவர்கள் இவ்வழக்கில் இறந்துபோன ராஜா கொலை செய்யப்பட்ட இடத்தை எங்கள் முன்பு பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தார். பார்வை மகஜரில் நானும், முருகேசன் என்பவரும் கையொப்பம் செய்தோம். பார்வை மகஜரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். பார்வை மகஜர் **அ.சா.ஆ.2**. சம்பவ

இடத்தில் இரத்தம்பட்டமண் சிறிதளவு, இரத்தம்படாத மண் சிறிதளவு ஆகியவற்றை ஆய்வாளர் அத்தாட்சி மூலம் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும், முருகேசன் என்பவரும் கையொப்பம் செய்தோம். அத்தாட்சியில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அத்தாட்சி **அ.சா.ஆ.3**. இரத்தம்பட்டமண் சிறிதளவு **சா.பொ.1.** இரத்தம்படாத மண் சிறிதளவு **சா.பொ.2.** பின்பு 20.08.2019ம் தேதி நான் ஜெகன் தியேட்டர் அருகில் உள்ள ஆட்டோ ஸ்டாண்டில் இருந்தபோது கேணிக்கரை ஆய்வாளர் அழைத்ததின்பேரில் இராமநாதபுரம் இரயில்வே கேட் அருகே நானும், முருகேசன் என்பவரும் அங்கு சென்றோம். அப்போது ஆய்வாளர் அவர்கள் எதிரியை எங்கள் முன்பு கைது செய்தார். எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், முருகேசன் என்பவரும் கையொப்பம் செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியை ஜெகன் தியேட்டருக்கு தென்புறம் உள்ள பூங்கா அருகே மறைத்து வைத்திருப்பதாக சொல்லி எங்களை அழைத்துச்சென்று எதிரி சரவணன் கத்தியை எடுத்து ஆஜர் செய்தார். அதை ஆய்வாளர் அத்தாட்சி மூலம் கைப்பற்றினார். அதில் நானும், முருகேசன் என்பவரும் கையொப்பம் செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.4**. அத்தாட்சி **அ.சா.ஆ.5**. கத்தி **சா.பொ.3**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நேரமின்மை காரணமாக குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியின் கையொப்பம்

என்னால் தட்டெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டெழுத்து செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | } | |
| Miscellaneous | .. | .. | } | |
| Preliminary Register | .. | .. | } | **S.C. 90/2020** |
| Sessions | .. | .. | } | |
| | | | } | Prosecution – **PW1** |
| Deposition of witness for | | | } | Defence – |
| | | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | மீனாட்சி |
| Husband Name | : | மீனாட்சி சுந்தரம் |
| Village | : | இராமநாதபுரம் |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Caste | : | |
| Calling | : | வீட்டுக்குடித்தனம் |
| Religion | : | இந்து |
| Age | : | 70 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.04.2023

<u>(எதிரி ஆஜர்.)</u>

முதல் விசாரணை–

நான் தற்போது இராமநாதபுரம் புளிக்காரத் தெருவில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன ராஜா எனது மகன் ஆவார். எனது மகன் ராஜாவுக்கு காளிஸ்வரன், இராஜேஸ்வரி என்ற இரண்டு குழந்தைகள் உள்ளது. எனது மகன் ராஜா இறப்பதற்கு முன்பு கொத்தனார் வேலை பார்த்து வந்தார். வழக்கின் ஆஜர் எதிரி சரவணனை தெரியும். எதிரி சரவணன் கொத்தனார் வேலை பார்க்கிறார். எனது மகன் இறப்பதற்கு முன்பு எனது மகனும், ஆஜர் எதிரி சரவணனும் கொத்தனார் வேலைக்கு போவார்கள். அவ்வாறு போகும்போது வேலை பார்த்த இடத்தில் சம்பளம் பிரச்சனை சம்மந்தமாக கேணிக்கரை பாலன் ஹோட்டல் அருகில் பிரச்சனை ஏற்பட்டது. அதில் இருவரும் மல்லுக்கட்டி சண்டைபோட்டார்கள். அதோடு எனது மகன் ராஜா மட்டும்

எனது வீட்டிற்கு வந்தார். அப்போது நான் எனது மகனிடம் என்ன நடந்தது என்று கேட்டேன். அதற்கு அவர் எனது மகனுக்கும், எதிரி சரவணனுக்கும் சம்பள பிரச்சனை தொடர்பாக சண்டை நடைபெற்றதாக சொன்னார். எனது மகன் மூஞ்சி எல்லாம் வீங்கிப்போய் வந்தார். அதோடு என் மகனை இங்கு இருக்க வேண்டாம். வெளியூருக்கு வேலைக்கு போகச்சொன்னேன். அதோடு என் மகன் திருப்பூருக்கு வேலைக்கு சென்றுவிட்டார். என் மகன் ராஜாவின் இரண்டு குழந்தைகளும் எனது பராமரிப்பில் இருந்து வருகிறார்கள். எனது மகனின் மனைவி கடந்த 10 வருடத்திற்கு முன்பே இறந்துவிட்டார். என் மகன் ராஜா திருப்பூரிலிருந்து அதிகாலை 19.08.2019 தேதி அதிகாலை 05.30 மணிக்கு எனது வீட்டிற்கு வந்தார். என்பா திடீரென வந்துவிட்டாயே என்று கேட்டேன். அதற்கு என் மகன் ராஜா அவரது குழந்தையை பார்ப்பதற்காக வந்ததாக சொன்னார். அன்று காலை 07.00 மணியளவில் வேலை எதுவும் இருந்தால் பார்த்துவிட்டு வருகிறேன் என்று வெளியே போனார். அதன் பிறகு காலை 11.00 மணிக்கு ரவி என்பவர் எனது பேரன் காளீஸ்வரனுக்கு போன் செய்து என் மகன் ராஜாவை ஜெகன் தியேட்டருக்கு அருகில் ஆஜர் எதிரி சரவணன் என்பவர் கத்தியால் குத்திவிட்டதாகவும் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் எனது மகன் ராஜாவை சேர்த்திருப்பதாகவும் எங்களை வரச்சொன்னதின்பேரில் நான், எனது பேரன் காளீஸ்வரன், எனது மகள் உமாராணி ஆகியோர்கள் சென்றோம். எனது மகன் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் மயக்க நிலையில் இருந்தார். அவருக்கு இடதுபக்க விலாவில் காயம் இருந்தது. வலது உள்ளங்கையில் காயம் இருந்தது. அப்போது கேணிக்கரை போலிசார் அங்கு வந்து என்ன நடந்தது என்று கேட்டார்கள். நான் சொல்லச் சொல்ல போலிசார் பேப்பரில் எழுதிக்கொண்டு என்னிடம் கைரேகை வாங்கினார்கள். புகாரில் உள்ள கைரேகை என்னுடையது தான். புகாரில் அறிவேன் சாட்சியாக ரவிந்திரன் என்பவர் கையொப்பம் செய்தார். புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1**. காயம்பட்ட எனது மகனை மேல்சிகிச்சைக்காக மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனைக்கு கொண்டு போகச்சொன்னார்கள். உடனே எனது மகன் ராஜாவை சிகிச்சைக்கு கொண்டு சென்றோம். 4 நாட்கள் மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டு 5வது நாள் எனது மகன் ராஜா இறந்துவிட்டார். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

எனக்கு தேதி, மாதம், வருடம் தெரியாது என்றால் தெரியும். என் மகன் ராஜாவுக்கு முகம் எல்லாம் காயமாகி வந்து சொன்ன தேதி ஆனி மாதம் 7ம் தேதி. வருடம் ஞாபகமில்லை. என் மகன் ராஜா இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சேர்த்த தமிழ் தேதி, மாதம், வருடம் என்னவென்றால் 2ம் தேதி, 19ம் மாதம், 19ம் வருடம் ஆகும். என்னை போலிசார் சாட்சி சொல்ல வருமாறு அழைப்பாணை கொடுத்தார்களா என்றால் இல்லை. நீதிமன்றத்திற்கு வருமாறு சொன்னார்கள். நான் என்ன படித்துள்ளேன் என்றால் படிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் அழைப்பாணையில் உள்ளது என்னுடைய கைரேகை தான். அழைப்பாணையில் உள்ள கைரேகையை எங்கு வைத்து வாங்கினார்கள் என்றால் பெரிய ஆஸ்பத்திரியில் வாங்கினார்கள். என் மகன் ராஜா சிகிச்சையில் இருந்தபோது வாங்கினார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள ரேகை எப்போது வாங்கினார்கள் என்றால் மருத்துவமனையில் வைத்து வாங்கினார்கள். எத்தனை ரேகை அந்த தேதியில் வாங்கினார்கள் என்றால் ஒரு ரேகை வாங்கினார்கள். அழைப்பாணையில் உள்ள கைரேகையை மீண்டும் காட்டி கேட்டபோது தன்னுடைய ரேகை இல்லை என்று சாட்சி சொல்கிறார். இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் வெள்ளைத்தாளில் ரேகை வைத்தேன் என்றால் நான் சொல்ல சொல்ல எழுதி ரேகை வைத்தேன். நான் சொல்ல சொல்ல எழுதியது ஆய்வாளர் என்றால் சரிதான். நான் சொல்ல சொல்ல எழுதப்பட்டதில் அடித்தல், திருத்தல் எதுவும் இல்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் 2வது பக்கத்தில் Whitener போடப்பட்டு அதன்மேல் மீண்டும் எழுதப்பட்டுள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. என் மகன் ராஜாவுக்கு குடிப்பழக்கம் உள்ளது என்றால் இல்லை. என் மகன் ராஜாவின் மீது கேணிக்கரை காவல் நிலையத்தில் வழக்குகள் உள்ளன என்றால் இல்லை. என் மகன் ராஜா வேலை பார்த்தது திருப்பூரில் என்றால் சரிதான். திருப்பூரில் எந்த இடத்தில் வேலை பார்த்தார் என்றால் எனக்கு தெரியாது. திருப்பூரில் எத்தனை மாதங்கள் வேலை பார்த்தார் என்றால் 3 மாதங்கள் வேலை பார்த்தார். என் மகன் அடிதடிக்கு செல்லும் நபர் என்றால் இல்லை. என் மகன் முகத்தில் அடிபட்டு வந்த உடன் இங்கு இருக்க வேண்டாம் என்று நான் அனுப்பி வைத்தேன் என்றால் சரிதான். என் மகன் முகத்தில்

காயம்பட்டு வந்தபோது நானோ, என் மகனோ, என் மகளோ காவல் நிலையத்தில் அது தொடர்பாக புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. என் மகன் யாரிடம் கொத்தனார் வேலை பார்த்தார் என்றால் யார் கூப்பிட்டாலும் போவார். என் மகன் வேலைக்கு சென்ற இடத்தில் பெண்களிடம் ஒழுங்கீனமாக நடந்து கொண்டதாலும், குடித்துவிட்டு பெண்களிடம் ஒழுங்கீனமாக நடந்து கொண்டதாலும் யாரும் அவரை வேலைக்கு வைத்துக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு யாரும் வேலைக்கு சேர்க்காததால் தான் என் மகன் திருப்பூருக்கு வேலைக்கு சென்றார் என்றால் சரியல்ல. அவரை கொன்றுவிடுவதாக மிரட்டியதால் சென்றார். நான் எதிரியின் வீட்டிற்கு சென்றோ, பிரச்சனை நடைபெற்ற இடத்திற்கு சென்றோ என்ன நடந்தது என்று விசாரித்தேனா என்றால் இல்லை. எதிரியின் தந்தை பெயர், விலாசம் என்னவென்றால் அவரது தந்தை பெயர் ஸ்ரீனிவாசன், அவர் பசும்பொன் நகரை சேர்ந்தவர். அவரது வீட்டுக்கதவு எண் மற்றும் பசும்பொன் நகரில் எந்த தெரு என்றால் எனக்கு தெரியாது. நான் எதிரியிடம் சம்பவத்திற்கு முன்போ, பிறகோ நேரடியாக பேச்சுவார்த்தை வைத்துக்கொண்டதில்லை என்றால் சரிதான். என் மகன் திருமணமாகி குழந்தைகளுடன் தனியாக முதலில் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். என் பேரனுக்கு செல்போன் உண்டு என்றால் சரிதான். எனக்கு செல்போன் உள்ளதா என்றால் இல்லை. நான் தற்போது எனது மகளுடன் தங்கப்பா நகரில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். என் மகனின் மனைவி இறந்தபிறகு அவரது குழந்தைகளுடன் நான் என் மகள் வீட்டில் வசித்து வந்தேன் என்றால் இல்லை. என் மகன் மது அருந்துவார் மற்றும் கெட்ட சகவாசம் இருந்ததால் தனது பிள்ளைகளை பார்த்துக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. என் மகனுக்கும் எதிரிக்கும் நடந்ததாக சொல்லப்படும் தகராறை தவிர வேறு பிரச்சனை இல்லை என்றால் சரிதான். என் மகன் ராஜாவின் மனைவி தீவைத்து தற்கொலை செய்து கொண்டார் என்றால் சரிதான். என் மருமகள் தற்கொலை செய்து கொண்டது சம்மந்தமாக என் மகன் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் இல்லை. கணவன் மனைவி தகராறில் தான் என் மருமகள் தற்கொலை செய்தார் என்றால் சரிதான். என் மருமகள் இறந்த பிறகு அவரது வீட்டார் என்னுடன் பேசமாட்டார்கள் என்றால் சரியல்ல. எனது மருமகளின் வீட்டார் எனது மருமகள் தற்கொலை செய்து கொண்டதால் என் மகனுடன் அடிக்கடி பிரச்சனை

செய்வார்கள் என்றால் இல்லை. எனது மருமகள் வீட்டார் என் மகனுடன் தகராறு செய்து அவரது உயிருக்கு பாதுகாப்பு இல்லாத காரணத்தால் எனது மகனை திருப்பூருக்கு நான் அனுப்பினேன் என்றால் சரியல்ல. எனது மகளின் மகளைத்தான் என் மகனுக்கு திருமணம் செய்து வைத்தேன் என்றால் சரிதான். எனது மகளையும், அவரது வீட்டை சேர்ந்தவர்களையும் போலிசார் காவல் நிலையத்திற்கு அழைத்துச்சென்றார்கள் என்றால் இல்லை. எனக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 2 மகள்கள் மற்றும் 1 மகன். என் மகன் மதுஅருந்திவிட்டு தகராறு செய்வார் என்றாலும் வீட்டிலும் தகராறு செய்வார் என்றாலும் அது குறித்து நன்கு தெரிந்தும் நான் மறைக்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவருக்கு நான் இரண்டாவது மனைவி என்றால் சரிதான். மூத்த மனைவிக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் தெரியாது. மூத்த மனைவியின் மகளைத்தான் என் மகன் ராஜா திருமணம் செய்தார் என்றார் இல்லை. நானும், என் கணவரின் மூத்த மனைவியும் பேசிக்கொள்வதில்லை என்றால் சரிதான். என் கணவரின் மூத்த மனைவியைவிட்டு என்னை திருமணம் செய்ததால் தகராறு என்றால் இல்லை. என் மகன் குத்துப்பட்ட விவரம் நான் புளிக்காரத் தெருவில் இருந்தபோது தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். புளிக்காரத்தெருவிலிருந்து இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு 10 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றால் ஆட்டோவில் சென்றுவிடலாம். அப்போது காயம்பட்டவர் யார் என்பது குறித்த விபரங்களை மருத்துவர் என்னிடம் கேட்க நான் சொன்னேன் என்றால் சரிதான். அதை மருத்துவர் எழுதிக்கொண்டார் என்றால் சரிதான். என் மகன் அணிந்திருந்த உடைகளில் இரத்தக்கறை இருந்தது என்றால் சரிதான். என் மகனிடம் என்ன நடந்தது என்று விசாரித்து அவர் சொன்னாரா என்றால் இல்லை. மயக்கமாக இருந்தார். போலிசார் சுமார் 10 நிமிடத்தில் மருத்துவமனைக்கு வந்தார்கள் என்றால் சரிதான். என்னுடன் மருத்துவமனைக்கு யார் வந்தார்கள் என்றால் என் மகளும், பேரனும் வந்தார்கள். என் பேரனையும், மகளையும் போலிசார் விசாரித்தார்களா என்றால் இல்லை. மதுரையில் வைத்துத்தான் விசாரித்தார்கள். புகார் கொடுக்கும்போது நான், என் பேரன் காளீஸ்வரன், என் மகள் உமாராணி, மருத்துவர் மற்றும் போலிசார் மட்டும் தான் இருந்தார்கள் என்றால் சரிதான். அவர்களைத் தவிர வேறுயாரும் இல்லை என்றால் சரிதான். இராமநாதபுரம் அரசு மருத்துவமனையிலிருந்து மதுரை இராஜாஜி

மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு யாரெல்லாம் சென்றோம் என்றால் மாலை 05.00 மணிக்கு ஆம்புலன்ஸில் நானும், என் மகள், என் பேரன் மற்றும் ரவி ஆகியோர்கள் சென்றோம். மதுரை இராஜாஜி மருத்துவமனையில் நான் என் மகனுடன் கூடவே இருந்தேன் என்றால் சரிதான். என் மகன் மருத்துவமனையில் பேசிச்கொண்டிருந்தார் என்றால் இல்லை. என் மகன் கண்விழித்து பார்க்கவில்லை. மதுரை இராஜாஜி மருத்துவமனையில் என்ன நடந்தது என்று மருத்துவர் என்னிடம் கேட்டு எழுதிக்கொண்டார் என்றால் சரிதான். அப்போது போலிசார் வந்தார்கள் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் 06.00 மணிக்கு வந்தார்கள். அப்போது என்னிடம் விசாரித்தார்கள் என்றால் சரிதான். அவ்வாறு விசாரித்தபோது போலிசார் எழுதிக்கொண்டார்களா என்றால் இல்லை. ஆனால் மடிக்கணினியில் பதிவு செய்தார்கள். அவ்வாறு பதிவு செய்தது யார் என்றால் ஆய்வாளர். அதன் பிறகு போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. மதுரை இராஜாஜி மருத்துவமனையில் வைத்து என் மகள், என் பேரன் மற்றும் ரவி ஆகியோரையும் விசாரித்து மடிக்கணினியில் பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். நான் சொன்னது போல சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் போலிசார் சொல்லிக்கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி, சொன்ன தேதியில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் சரியல்ல. என் மருமகள் இறந்தது காரணமாக என் மகனின் மனைவி குடும்பத்தார் என் மகன் மீது கோபமாக இருந்தார்கள் என்றாலும் அதோடு எனது கணவரின் மூத்த மனைவியின் குடும்பத்தாரும் எங்கள் குடும்பத்தோடு விரோதமாக இருந்தார்கள் என்று சொன்னாலும் அதனால் என் மகன் எங்கோ, எப்படியோ காயம்பட்டு கிடந்தவரை மேற்சொன்ன என் மகனின் மனைவி குடும்பத்தாரை மற்றும் என் கணவரின் மூத்த மனைவியின் குடும்பத்தாரை காப்பற்றவேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் குடியிருக்கும் வீடு என் கணவருக்கு உரியது. அந்த வீட்டை என் கணவரின் மூத்த மனைவியின் பிள்ளைகள் வந்து கேட்டு தகராறு செய்தார்கள் என்றால் இல்லை. அப்போது என் மகன் ராஜா வீட்டை கொடுக்க முடியாது என்று தகராறு செய்தார் என்றால் இல்லை. அதனால் எங்களுக்குள் விரோதம் இருந்தது என்றால் இல்லை.

நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியின் கையொப்பம்

என்னால் தட்டெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டெழுத்து செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.